**செய்தி வெளியீடு எண்: 545** **நாள் : 09.10.2013**

# <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆந்திர மாநிலம் புத்தூரில் பதுங்கியிருந்த தலைமறைவு எதிரிகளான பிலால் மாலிக் மற்றும் பன்னா இஸ்மாயில் ஆகியோரை கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்ட காவல் துறையினருக்கு இன்று **(9.10.2013)** தலைமைச் செயலகத்தில், பரிசுத் தொகைக்கான காசோலைகளை வழங்கி பாராட்டினார்கள்.

கடந்த ஜூலை மாதத்தில் வேலூரில் இந்து முன்னணிப் பிரமுகர் வெள்ளையப்பன் மற்றும் பாரதீய ஜனதா கட்சியின் மாநிலச் செயலாளர் ஆடிட்டர் ரமேஷ் ஆகியோர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட வழக்குகளில் துரித புலன் விசாரணை மேற்கொண்டு குற்றவாளிகளை விரைவில் கண்டுபிடிக்க ஏதுவாக, அதற்கென குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை தலைமை இயக்குநர் திரு. நரேந்திரபால் சிங், இ.கா.ப. தலைமையில் சிறப்பு புலனாய்வுக் குழுவை அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள். மேற்படி கொலை வழக்குகளிலும், மதுரை, திருமங்கலத்தில் கடந்த **2011**ஆம் ஆண்டு பாரதீய ஜனதா கட்சியின் மூத்தத் தலைவர் திரு எல்.கே. அத்வானி அவர்கள் செல்லவிருந்த பாதையில் வெடிகுண்டு வைத்த வழக்கு மற்றும் பல வழக்குகளிலும் மதுரையைச் சேர்ந்த ‘போலீஸ்’ பக்ருதீன், பிலால் மாலிக், திருநெல்வேலியைச் சேர்ந்த பன்னா இஸ்மாயில் மற்றும் நாகூரைச் சேர்ந்த அபுபக்கர் சித்திக் ஆகியோரை காவல் துறையினர் தேடி வந்தனர்.

மேற்படி தலைமறைவு எதிரிகளில் ஒருவரான ‘போலீஸ்’ பக்ருதீன் **4.10.2013** அன்று காவல் துறையினரால் கைது செய்யப்பட்டார். இந்தத் தருணத்தில் கிடைத்த மற்றொரு தகவலின் அடிப்படையில், ஆந்திர மாநிலம் புத்தூரில் பதுங்கியிருந்த இதர தலைமறைவு எதிரிகளான பிலால் மாலிக் மற்றும் பன்னா இஸ்மாயில் ஆகியோரை கைது செய்ய தனிப்படையினர் புத்தூர் விரைந்து **5.10.2013** அன்று மேற்படி தலைமறைவு எதிரிகள் பதுங்கியிருந்த வீட்டை சுற்றி வளைத்தனர். காவல் துறையினரின் தீவிர முயற்சியின் பலனாக எதிரிகள் பிலால் மாலிக் மற்றும் பன்னா இஸ்மாயில் கைது செய்யப்பட்டனர். இந்த நடவடிக்கையின் போது, சிறப்புப் பிரிவைச் சேர்ந்த ஆய்வாளர் திரு **S.** லட்சுமணன் அவர்கள் எதிரிகளால் கொடூரமான ஆயுதங்களால் கடுமையாக தாக்கப்பட்டதையடுத்து அவர் உடனடியாக சென்னை போரூர் இராமச்சந்திரா மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

சென்னை, சிறப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை ஆய்வாளர் திரு. S. லட்சுமணன் அவர்களின் துணிச்சலை பாராட்டி தமிழக அரசின் சார்பாக ரொக்கப் பரிசாக **15** லட்சம் ரூபாயும், அவருடைய மருத்துவச் செலவு அனைத்தையும் தமிழ்நாடு அரசே ஏற்றுக் கொள்ளும் என்றும், மேற்படி குற்றவாளிகளைப் பிடிப்பதற்கு வீரதீரத்துடன் செயலாற்றிய சிறப்புக் குழுவைச் சேர்ந்த காவலர் முதல் காவல் கண்காணிப்பாளர் வரையிலான **21** பேருக்கும் தலா **5** லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசும், காவலர் முதல் காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர் வரை உள்ள **20** பேருக்கு ஒருபடி பதவி உயர்வும் வழங்கப்படும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் **8.10.2013** அன்று அறிவித்தார்கள்.

அதன்படி, துரித புலன் விசாரணை மேற்கொண்டு குற்றவாளிகளை விரைவில் கண்டுபிடிக்க ஏதுவாக விரைவு நடவடிக்கைகளை மேற்கொண்ட காவல் துறை தலைவர் திரு. கே.ராமானுஜம், இ.கா.ப., குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை தலைமை இயக்குநர் திரு. நரேந்திரபால் சிங், இ.கா.ப., கூடுதல் காவல் துறை தலைவர் (நுண்ணறிவு) திரு. அசோக்

குமார், இ.கா.ப., குற்றப் பிரிவு கூடுதல் காவல் துறை தலைவர் திரு. கரன் சின்கா, இ.கா.ப., காவல் துறை தலைவர் (நுண்ணறிவு) திரு. அமரேஷ் புஜாரி, இ.கா.ப., காவல் துறை தலைவர் நுண்ணறிவு (உள்நாட்டுப் பாதுகாப்பு) திரு. P.கண்ணப்பன் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறை, சிறப்பு புலனாய்வுபிரிவு காவல் துறை தலைவர் திரு. மகேஷ்குமார் அகர்வால், இ.கா.ப. ஆகியோரை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் பாராட்டினார்கள்.

அத்துடன், தங்களது உயிரைப் பணயம் வைத்து மிகுந்த கடமை உணர்வுடனும், துணிச்சலுடனும் போராடி பணியாற்றிய சிறப்பு குழுவைச் சேர்ந்த தெற்கு மண்டல குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை காவல் கண்காணிப்பாளர் திரு டி.எஸ். அன்பு, இ.கா.ப., சென்னை, சிறப்புப் பிரிவு காவல் கண்காணிப்பாளர் திரு அர. அருளரசு, சென்னை, சிறப்புப் பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு ஜி. சங்கர், திருவள்ளூர் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு டி. செந்தில்குமார், மதுரை சிறப்புப் புலனாய்வுக் குழு துணை காவல் கண்காணிப்பாளர் திரு எம். கார்த்திகேயன், மதுரை நகர் சிறப்புப் புலனாய்வுக் குழு உதவி ஆணையாளர் திரு எஸ்.மாரிராஜன், சென்னை சிறப்புப் பிரிவு ஆய்வாளர் திரு பி. ரவீந்திரன், கிருஷ்ணகிரி குற்றப் புலனாய்வுத் துறை ஆய்வாளர் திரு ஆர். விஜயராகவன், சேலம் குற்றப் புலனாய்வுத் துறை ஆய்வாளர் திரு எஸ். ஆனந்தகுமார், திருவள்ளூர் மாவட்ட திருத்தணி காவல் நிலைய ஆய்வாளர் திரு டி. வீமராஜ், சென்னை சிறப்புப் பிரிவு உதவி ஆய்வாளர் திரு எம். வெற்றிவேல், சென்னை சிறப்புப் பிரிவு உதவி ஆய்வாளர் திரு ஆர். மணிகண்டன், சென்னை சிறப்புப் பிரிவு தலைமைக் காவலர் திரு J. எட்வர்டு பிரைட், சென்னை, தனிப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை தலைமைக் காவலர் திரு பி. பிரபு, சென்னை குற்றப் புலனாய்வுத் துறை தலைமைக் காவலர் திரு எஸ். ஆனந்தன், திருவள்ளூர் மாவட்ட திருத்தணி காவல் நிலைய தலைமைக் காவலர் திரு எம். இளங்கோ, மதுரை சிறப்புப் புலனாய்வுக் குழு முதல் நிலைக் காவலர் திரு பி. சிவனேசன், சிறப்புப் பிரிவு காவலர் திரு கே. ராஜசேகரன், திருவள்ளூர் மாவட்ட திருத்தணி காவல் நிலைய காவலர் திரு ஏ. சுஜின், திருவள்ளூர் மாவட்ட ஆயுதப் படை காவலர் திரு கே. கலைவாணன் மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆயுதப் படை காவலர் திரு ஆர். ராஜகுமார் ஆகிய **21** காவல் துறையினரை கௌரவிக்கும் வகையில் அவர்களுக்கு தலா **5** லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கி, அவர்கள் தங்கள் உயிரை துச்சமெனக் கருதி வீரதீரத்துடன் செயலாற்றியமைக்காக மனமார்ந்த பாராட்டுதல்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தெரிவித்துக் கொண்டார்கள்.

அப்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ‘‘ First of all let me express my warmest congratulations and felicitations to all of you starting from the DGP to the Constables involved in this operation. I have always maintained that the Tamil Nadu Police Force is the best in the country and once again I am very proud and happy that you have proved me right. This is a significant achievement for the Tamil Nadu Police which will be recorded in history as one of the very splendid achievements in the Tamil Nadu Police.

இதில் ஈடுபட்ட உங்கள் அனைவருக்கும் என்னுடைய நல்வாழ்த்துகளை, பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசாங்கத்தின் சார்பில் என்னுடைய தனிப்பட்ட சார்பில், தமிழக மக்களின் சார்பில் எங்களுடைய நன்றியை உங்களுக்கு, தெரிவித்துக் கொள்கிறேன். இதில் ஈடுபட்ட அனைவருக்கும் ஒருபடி பதவி உயர்வு, Accelerated Promotion அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதில் ஈடுபட்ட அனைவருக்கும் **5** லட்ச ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்பட்டு இருக்கிறது. இந்த ரொக்கப் பரிசு உங்கள் தியாகத்திற்கும், கடமை உணர்விற்கும், உங்கள் சேவைக்கும் கொடுக்கப்படுகிற ஒரு மதிப்பீடு இல்லை. எங்களுடைய அன்பு, நன்றி, மதிப்பு, நல்லெண்ணம், இந்த அரசாங்கத்துடைய நன்றி இதனுடைய ஒரு அடையாளம். அவ்வளவு தான். அதனால் உங்களைக் கண்டு இந்த அரசாங்கமும், நானும் பெருமைப்படுகிறோம். இதுவரை தமிழக காவல் துறை அரிய பல சாதனைகளை நிகழ்த்தி இருக்கிறது. அந்த சாதனை வரலாற்றில் மேலும் ஒரு குறிப்பிடத்தக்க பொன் எழுத்துக்களால் எழுத வேண்டிய ஒரு சாதனையை நீங்கள் நிகழ்த்தி உள்ளீர்கள். அதற்கு மீண்டும் ஒரு முறை உங்கள் அனைவருக்கும் எனது இதயமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழக மக்களின் சார்பில் எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் தொடர்ந்து இதே கடமை உணர்வுடன் பணியாற்றி தமிழக மக்களுக்காக, இந்த நாட்டின் நலனுக்காக, தமிழக காவல் துறைக்கு பெருமை சேர்ப்பதற்காக, இந்த அரசுக்கு பெருமை சேர்ப்பதற்காக, பல அரிய பணிகளை ஆற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு முழுவதுமாக உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.'' என்று தெரிவித்தார்கள்.

பின்னர், புத்தூரில் பதுங்கியிருந்த தலைமறைவு எதிரிகளான பிலால் மாலிக் மற்றும் பன்னா இஸ்மாயில் ஆகியோரை கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்ட காவல் துறையினர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்வின் போது அரசு தலைமைச் செயலாளர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப. மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**
**நாள்: 9.10.2013**